விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 134 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 19 திங்கட்கிழமை (02.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### கிளிநொச்சியில் இடம்பெற்ற
## தமிழ்த் தேசிய மே தினப் பேரணி

'கோட்டா கோ ஹோம்' என்ற கோசங்களுடன் சவப்பெட்டி எரித்துப் போராட்டம்



03

## தடுப்பூசி கட்டாயம் வர்த்தமானி அறிவித்தல் இரத்து

(கொழும்பு)
பொது இடங்களுக்கு பொதுமக் 15

## நாளை புனித ரமழான்

(கொழும்பு)
இலங்கை முஸ்லிம்கள் நாளை 3ஆம் திகதி புனித ரமழான் பெருநாளை கொண்டா 15

## மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு

(கொழும்பு)
தமது பணிப்புறக்கணிப்பு காரணமாக நாட்டில் மீண்டும் எரி 15

# வடக்கு - கிழக்கை தமிழர்களின் தேசமாக அங்கீகரியுங்கள்

### நாங்கள் உங்களுடன் போராட வருகிறோம்
### பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



*(கிளிநொச்சி)*
வடக்கு - கிழக்கை தமிழர்களின் தேசமாக அங்கீகரிப்போம் எனும் உத்தரவாதத்தை வழங்குங்கள். நாங்கள் உங்களுடன் போராட வருகின்றோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஓமல்பே சோபித தேரர் மற்றும் கொழும்பில் போராட்டம் நடத்தும் இளைஞர், யுவதிகளிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

### அலையென திரண்ட மக்களுடன்
## நாடளாவிய ரீதியில் மே தினக் கூட்டங்கள்



15

## அரசியலமைப்பு சீர்திருத்தங்களால் ஒருபோதும் தீர்வு கிடைக்காது
### மே தினக் கூட்டத்தில் ரணில்



(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கூற்றுப்படி, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டாலும் 21ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் உருவாக்கப்பட் 15

## புதிய அரசாங்கத்தை தெரிவு செய்ய பொதுமக்களுக்கு இடமளிக்க வேண்டும்
### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

(கொழும்பு)
மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அனைத்து தலைவர்களும் பதவி விலகி தேர்தலை நடத்தி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு இடமளிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து 15

## இலங்கையை மீட்டெடுக்க பிரதமர் மோடி தயார் நிலையில்
### பா.ஜ.கவின் தமிழக தலைவர்

(கொழும்பு)
இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் போராடிக் கொண்டிருக்கின்றது.
அன்று அனுமான் எப்படி சஞ்சீவ மலையை சுமந்தாரோ, அதுபோலவே 15

## மே தின கூட்டத்தில் முதியவர் மரணம்

(கொழும்பு)
ஐக்கிய மக்கள் 15

## இன்று அல்லது நாளை பதவி விலகவுள்ள பிரதமர் மகிந்த?

(கொழும்பு)
பிரதமர் பதவி தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயார் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.
இந்நிலையில் அவர் இன்று அல்லது நாளை பதவி விலகுவார் என தகவல் வெளியாகியுள்ளது. (4.7)

## நம்பிக்கையில்லா பிரேரணை நாளை பாராளுமன்றில்

(கொழும்பு)
நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப்பிரேரணை என்பன நாளை 3ஆம் திகதி பாராளு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற கட்சிகளின் மேதினக் கூட்டங்கள்



மக்கள் விடுதலை முன்னணி





ஐக்கிய மக்கள் சக்தி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி



ஐக்கிய தேசியக் கட்சி

# நிலைமைகள் கைமீறிவிட்டன ஜனாதிபதியிடமே தீர்வு உள்ளது

## விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு) பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து எதிர்மறையான நிலைமைகளும் கைமீறி விட்டன என்று சுட்டிக்காட்டிய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜய தாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடத்திலேயே உக்கிரமடைந்து வரும் அனைத்து விடயங்களுக்குமான தீர்வு காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரத்தில் நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்ட தருணத்தில் அதாவது கடந்த ஏப்ரல் மாதத்தில் அரசியல் ரீதியாக முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அதனை நான் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதியிடத்தில் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம்.

அச்சமயத்தில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அந்த விடயத்தினை பொருட்டாகக் கொள்ளவில்லை. அதன் பின்னர் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைய ஆரம்பித்தன.

பொருளாதார நிலைமைகள் இறுக்கமான கட்டத்தினை அடைந்தது ஒருபுறமிருக்கையில் காலிமுகத்திடல் தொடர்போராட்டங்கள் உட்பட பொதுமக்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

தற்போது அந்தப்போராட்டங்கள் முழு வீச்சினை அடைந்து விட்டன. இந்த நிலையில்கூட, 21 ஆவது திருத்தச்சட்டத்தினை தற்காலிக ஏற்பாடாக கொண்டு வருவதற்கான வரைவொன்றை தனிநபர் பிரேரணையாக நான் உள்ளிட்ட எமது அணியினர் சபாநாயகரிடத்தில் கையளித்துள்ளோம்.

ஆனால் அதுசம்பந்தமாக அரசாங்கம் கூடிய கரிசனை கொண்டதாக இல்லை. தற்போது கூட ஜனாதிபதி சர்வ கட்சிகளின் பங்கேற்புடனான இடைக்கால அரசாங்கத்தினை அமைப்பதற்கு தயாராக உள்ளதாக தெரிவிக்கின்றார்.

ஆனால், எதிர்க்கட்சி இந்த செயற்றிட்டத்தில் இணைவதற்கு தயாரில்லை. ஆகவே இந்த முயற்சி வெற்றி அளிக்குமா என்று திடமாக நம்பிக்கை கொள்ள முடியாது என தெரிவித்தார். (4-7)


### பணியாளர்கள் தேவை

வலிகாமம் மற்றும் யாழ்ப்பாண மத்தி பகுதியிலிருந்து CCTV Operator, Data entry வேலையை முழு நேரம் மற்றும் பகுதிநேரமாக செய்வதற்கு தகுதியான பெண் பணியாளர்கள் தேவை. (11248)

077 868 8517, 076 989 9977


# மரண அறிவித்தல்



## திரு. செல்லத்துரை விக்கினேஸ்வரன்

( சிம்மக்குரலோன் விக்கி )

(புலோலி ப.நோ.கூ.ச. முன்னாள் கிளை முகாமையாளரும் சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் சதாவதானி சி.க.கூ.ச. முன்னாள் தலைவரும் இந்நாள் உபதலைவரும்)

தம்பசிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை விக்கினேஸ்வரன் அவர்கள் நேற்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - புஷ்பகாந்தம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும் பாலகிருஷ்ணன் பரமேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற முருகேசு, பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் முகுந்தன், சுகந்தன், மலர்விழி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சிகாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.05.2022) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பகல் 10.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.
021 226 0139
தகவல்:- குடும்பத்தினர்


### விற்பனைக்கு

முட்டை இடும் ஊர்ப் பேட்டுக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. (11204)

075 999 5959

### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் 100% பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-4268)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மே தினத்தை முன்னிட்டு
# கிளிநொச்சியில் மாபெரும் பேரணி





(கிளிநொச்சி)

சர்வதேச மே தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று தமிழ் தேசிய மே தின கூட்டமும் மாபெரும் பேரணியும் இடம் பெற்றது.

வட மாகாணம் தழுவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த மே தின நிகழ்வில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது அரசியல் கைதிகளின் விடுதலை, விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் உள்ளிட்ட கருத்துக்களை உள்ளடக்கிய வாகனங்களும் குறித்த பேரணியில் பங்கு பற்றின.

இதன்போது ஜனாதிபதி, பிரதமர், பசில் ராஜபக்ஷ, சமல் ராஜ பக்ஷ மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோர் விவசாயிகளின் பிரேத பெட்டியை சுமந்து வருகின்ற காட்சிகளும் சித்தரிக்கப்பட்டன.

குறித்த பேரணியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சிறீதரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (4-6-100-315316)

# தொடரும் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம்
# ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டம்






(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு - காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை 23 ஆவது நாளாக தொடர்ந்தது.

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று தொழிலாளர்களுக்கான உரிமைகளை வலியுறுத்தி கறுப்புக் கொடியேற்றி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் ஜனநாயகம் மற்றும் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள எஸ்.டபிள்யு. ஆர்.டீ.பண்டாரநாயக்காவின் உருவச்சிலையின் கண்கள் கறுப்பு நிறத்துணியால் கட்டப்பட்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் நேற்று முன்தினம் பெருமளவான பல்கலைக்கழக மாணவர்களும், முற்போக்கு சிந்தனையுடைய கலைஞர்களும் அதில் கலந்து கொண்டனர்.

"மக்கள் எழுச்சியில் கலைஞர்கள்" என்ற தொனிப்பொருளில் அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

அத்தோடு நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டுக்கு உடன் தீர்வை வழங்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் பல பல்கலைக்கழகங்களிலுமுள்ள மருத்துவ பீட மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மேலும் தகவல் தொழில் நுட்ப துறைசார் நிபுணர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

அத்தோடு மட்டக்களப்பிலிருந்து வருகை தந்த காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்களுடன் தொடர்புடையவர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இதே போன்று அலரி மாளிகை வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டம் நேற்று ஆறாவது நாளாகவும் தொடர்ந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்திலும் பெருமளவானோர் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம் தொடர்

# அனைத்துப் பிரிவுகளிலும் கொக்குவில் இந்து சம்பியன்



யாழ்.கல்வி வலய பாட சாலைகளுக்கு ஆண்கள், பெண்களுக்கான கரம் தொடரில் அனைத்துப் பிரிவிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

17 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதியது.



இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். 3ம் இடத்தை கொக்குவில் ஞான பண்டிதா வித்தியாலய அணி பெற்றது.

17 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதியது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். 3ம் இடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றனர்.

20 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

3ம் இடத்தை சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டனர்.

20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். 3ம் இடத்தை சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணி பெற்றது. (4-6-90)



வட மாகாண விளையாட்டு திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்டத்திலான திறந்த வயதுப் பிரிவினருக்கான மல்யுத்த போட்டியில் வெற்றி பெற்ற முல்லைத்தீவு மாவட்ட மு/வித்தியானந்த கல்லூரி மாணவர்கள் பாடசாலை சமூகத்தினரால் கௌவிக்கப்பட்டனர். (படம்-கனகராஜா)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2607

**கனிஷா**




**தாரு**




**நிதர்சினி**




**வைதேஷ்**




**நதீசனா**




**வித்தியா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி, பிரதமருக்கு எதிரான பிரேரணைகள் ஒரே நேரத்தில் முன்னகர்த்த எதிர்க்கட்சிகள் இணக்கம்

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராகவும் கொண்டு வரப்படவுள்ள இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் ஒரே தருணத்தில் முன்னகர்த்துவதற்கு எதிர்க்கட்சிகள் இணங்கியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான சஜித் பிரேமதாச, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட சுமந்திரன், ஐக்கிய மக்கள் சக்தியானது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேணையை கொண்டு வரவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகளை அக்கட்சி முன்னெடுத்துள்ளது.

இவ்வாறான நிலையில், காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று என்னால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்த இரண்டு பிரேரணைகளையும் ஒரே தருணத்தில் தனிநபர் பிரேரணைகளாக பாராளுமன்றத்தில் முன்னகர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

காலிமுகத்திடலில் எழுச்சியாக போராடிவரும் போராட்டக்காரர்களும் நாடளாவிய ரீதியில் வீதிக்கு இறங்கியுள்ள பொதுமக்களும் ஜனாதிபதி கோட்டாபய, பிரதமர் மகிந்த் உள்ளிட்ட அனைத்து ராஜபக்ஷ குடும்பத்தினரையும் அவர்களது அரசாங்கத்தினையும் வீட்டுக்குச்செல்லுமாறே வலியுறுத்துகின்றனர்.

ஆகவே அந்த வலியுறுத்தல்களுக்கு மேலும் அழுத்தங்களை அளிக்கும் வகையிலேயே இரண்டு பிரேரணைகளையும் ஒரே தருணத்தில் முன்னகர்த்துவதற்கு எதிர்க்கட்சிகளிடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை தனித்தனியாக முன்னெடுக்க முயற்சிக்கப்படும் போது ஏதோவொரு ராஜபக்ஷவை காப்பாற்றுவதற்கு முயல்கின்றோம் என்ற தோற்றப்பாடும் விஷமத்தனமாக பரப்பப்படுகின்றது.

ஆகவே மக்களை குழப்பும் இவ்விதமான பிரசாரங்களுக்கு குறித்த இரு பிரேரணைகள் இரண்டையும் ஒன்றாக முன்னெடுப்பதன் மூலம் முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பிரதி அதிபர்
திரு.ச.மனோகரன் அவர்களின் அன்புத்தாயார்

அமரர். சபாரத்தினம் பரமேஸ்வரி



பிறப்பு 13 09 1949

இறப்பு 30 04 2022

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(11243)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி



மூத்த ஊடகவியலாளர்

திரு.கந்தையா குலசிங்கம்

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன்
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

வலம்புரி நிர்வாகம் (இ)


# இராசிபலன்

02.05.2022
சித்திரை 19, திங்கட்கிழமை
துதியை பின்னிரவு 4.59 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 12.23 மணிவரை
சுபநேரம்- 11.57-1.27 மணிவரை
இராகுகாலம் -7.27-8.57 மணிவரை
கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்-சித்திரை

வளவன்

**மேஷம்** காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்

**துலாம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய் தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற ஒரு முறைக்கு பல முறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கலாம்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பயணங்கள் கைகூடும்.

**தனுசு** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

ஆழமாக நேசிப்போர் ஆழமாக வெறுக்கவும் செய்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் தென்மராட்சி வலயம் முன்னிலை

## வலயக்கல்வி பணிப்பாளர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

அண்மையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தென்மராட்சிக் கல்வி வலயம் இலங்கையின் முதலாவது தமிழ் வலயமாகக் காணப்படுவதாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

அண்மையில் வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கையில் உள்ள 100 கல்வி வலயங்களில் தென்மராட்சி கல்வி வலயம் 16 ஆவது வலயமாக காணப்படுகிறது. அதிலும் முதலாவது தமிழ் வலயமாக தென்மராட்சி மிளிர்கிறது.

வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர்களின் அடிப்படையில் எமது வலயம் இலங்கையில் ஆறாவது வலயமாக காணப்படுகின்றது. இது ஓர் சாதனையாக கருதப்படுகிறது. தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு கற்றல், கற்பித்தல் செயற்பாடு மிகச்சிறந்த நிலையில் உள்ளமையை இது எடுத்துக்காட்டுகிறது.

இம்முறை ஆரம்பப் பிரிவில் சில பிரதேசங்களை முன்னுரிமைப்படுத்தி அதில் வெற்றி பெற்றுள்ளோம். நாம் பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கு கூடுதலான பங்களிப்பாற்றி வருகிறோம். பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை நாம் கண்காணிக்காது விட்டால் அவர்களது எதிர்காலம் பாதிப்படையும் என தெரிவித்தார். (4-6-30)

# இந்தியா செல்ல முயன்ற 13 பேருக்கும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து, பலாலி கடற்பரப்பின் ஊடாக இந்தியா செல்ல முற்பட்ட 13 பேரில் பலாலியைச் சேர்ந்த இரண்டு படகோட்டிகளையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்ட நீதவான் ஏனைய 11 பேரையும் பிணையில் விடுத்துள்ளார்.

திருகோணமலை தில்லை நகர் பகுதியைச் சேர்ந்த 3 ஆண்கள் , 3 பெண்கள் 5 சிறுவர்கள் மற்றும் படகோட்டிகளான பலாலி அன்ரனிபுரம் பகுதியைச் சேர்ந்த 2 ஆண்களும் உள்ளடங்கலாக 13 பேர், யாழ்ப்பாணம் பலாலி கடற்பரப்பின் ஊடாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தியா நோக்கி படகொன்றில் பயணித்த வேளை கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 13 பேரையும், மீட்கப்பட்ட படகு , இயந்திரம் உள்ளிட்டவற்றை கடற்படையினர் சட்ட நடவடிக்கைக்காக பலாலி பொலிஸாரிடம் கையளித்தனர்.

பொலிஸார் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். அத்துடன் சான்று பொருட்களாக படகு , வெளியிணைப்பு இயந்திரம் உள்ளிட்டவற்றையும் மன்றில் பாரப்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த மல்லாகம் நீதவான் படகோட்டிகள் இருவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறும் , ஏனைய 11 பேரையும் பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன் 12 ஆம் திகதிக்கு வழக்கினை ஒத்திவைத்து க்கட்டளையிட்டார். (4-6-33)

# கடற்படையின் படகு மோதியதில் கடற்தொழிலாளர்கள் படகு சேதம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பரப்பில் கடற்தொழிலாளர் சங்கத் தலைவரின் படகு மீது கடற்படைப் படையினரின் படகு மோதி விபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கடற்தொழிலாளிகள் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன், சங்கத் தலைவரின் படகு மற்றும் இயந்திரம் மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளன.


பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தேவராசா தேவகுமார் என்பவரது படகே சேதமடைந்துள்ளது. படகு சேதமடைந்ததால் நடுக்கடலில் தத்தளித்த கடற்தொழிலாளிகள் இருவரையும் சில நிமிடங்கள் கழித்து கடற்படையினர் கரை சேர்த்துள்ளனர்.

சம்பவத்தில் கடற்படையின் படகு மோதியதனால் தனது படகு மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளதாகவும் 10 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கடற்தொழிலாளர் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (4-6-18-33-104)



சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஏழாலை இந்து இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏழாலை மேற்கு உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. (படம் : ரவிசாந்)

# முள்ளிவாய்க்கால் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கேற்ப, எட்டு ஆர்.பி.ஜி குண்டுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. (4-6)

# தொழிலாளர் தினத்திலும் எரிபொருளுக்காக மக்கள் வரிசை



(குப்பிழான்)

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.மாவட்டத்தின் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மக்கள் எரிபொருளுக்காக நீண்ட நேரமாக வரிசையில் காத்திருந்தனர்.

அந்த வகையில் யாழ். நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றின் முன்பாக மண்ணெண்ணையைக் கொள்வனவு செய்வதற்காக மக்கள் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியிலும் வரிசையில் காத்து நின்றனர். (4-6-18)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

கொக்குவில் கிழக்கு காளியம்பாள் ஆலய வைகாசி விசாகப் பிரம்மோற்சவ மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்தும் 15 தினங்கள் இவ்வாலய மஹோற்சவம் நடைபெறும்.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்குச் சப்பரத் திருவிழாவும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும், அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)

# மக்கள் விடுதலை முன்னணியின் மே தினக் கூட்டம்



(குப்பிழான்)

மக்களை வதைக்கின்ற அரசாங்கத்தை விரட்டியடிப்போம்!, மக்கள் நேயமுள்ள ஆட்சியைக் கட்டியெழுப்புவோம்! எனும் தொனிப் பொருளிலான மக்கள் விடுதலை முன்னணியின் மாபெரும் மே தினக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி மே தினக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கலந்து கொண்டு பிரதான கருத்துரை ஆற்றினார்.

அத்துடன் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன், மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (4-6-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீர்திருத்தப்பட்ட நிறைவேற்று அதிகார முறைமையே தமிழர்களுக்கு அவசியம்

## கலாநிதி தயான் ஜயதிலக



(கொழும்பு)

சீர்திருத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையானது தமிழர்களின் பாதுகாப்புக்கு அவசியமானதாகும் என்று தெரிவித்துள்ள கலாநிதி. தயான் ஜயதிலக, இனவாதம், பிரிவினைவாதம், உள்நாட்டுப் போர் ஆகியவற்றிற்கு மூல காரணம் பாராளுமன்ற முறை மையாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தினை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க் கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வாக்குச் செலுத்தவல்ல எதிரணி தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்து கோசங்களை எழுப்ப ஆரம்பித்துள்ளன.

1972 இல் தமிழ்ப் புதிய புலிகளின் உருவாக்கம், 1976 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் உருவாக்கம், 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஆகியனவும் பாராளுன்ற முறைமையின் கீழேயே இடம்பெற்றன.

இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி முறைமையின் கீழாக, இந்திய வம்சாவழியைச் சேர்ந்த மலையக மக்களின் வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டமை, மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வுக்கான 13 ஆவது திருத்தச்சட்டம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை, 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத்திட்டம் போன்றன ஏற்படுத்தப்பட்டன.

ஆகவே, ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முயற்சியானது, பொருத்தமற்றது. மாறாக, எதேச்சதிகார ஜனாதிபதி முறை சீர்திருத்தப்பட்டு நிறைவேற்று அதிகாரக முறைமை நீடிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# இடைக்கால அரசாங்கம் நாட்டை மேலும் சீர்குலைக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



(கொழும்பு)

மக்கள் போராட்டத்தை, இடைக்கால அரசாங்கத்தின் மோசடிகளுக்காக காட்டிக் கொடுக்க முடியாது என எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

மோசடி, இலஞ்சம், ஊழல் நிர்வாகத்திலிருந்து விடுவிப்பதற்காகக் கொண்டு வரப்படும் மோசடியான தந்திரோபாயமே இடைக்கால அரசாங்கமாகும் எனவும் சஜித் தெரிவித்தார்.

இதனூடாக, இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக நாட்டை மேலும் சீர்குலைக்கும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான மோசடியான அரசாங்கத்துடன் இணைவதை விட பதவிகளை இராஜினாமா செய்வதே தனக்கு மகிழ்ச்சியானது எனவும் தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 29 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று புதுக் கடையில் உள்ள ரணசிங்க பிரேமதாச உருவச் சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

அதன்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (நி-6)

# அதிக விலைக்கு விற்கப்படும் உரம் விலை சூத்திரம் அறிமுகப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

உரங்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், உர இறக்குமதி விடயம் தொடர்பில் அரசாங்கம் தலையிட்டு பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்க முன்வந்துள்ளதாக விவசாய அமைச்சர் ஜானக வக்கும்புர மேலும் தெரிவித்தார். (நி-6)

# மருந்து பொருட்களின் விலை அதிகரிப்பு வர்த்தமானியை இரத்து செய்யுமாறு கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் 60 வகையான மருந்துப் பொருட்களின் விலையை 40 சதவீதத்தினால் அதிகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்யுமாறு அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் தலைவர் அஜித் திலகரத்ன இந்த விடயம் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை மற்றும் மருந்தக நிறுவனங்களின் ஊடாக தற்போது மருந்துப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் மக்கள் வெகுவாக பாதிப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# டொலர் நெருக்கடியால் விமானங்களை மட்டுப்படுத்த தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியின் விளைவாக இலங்கைக்கு சேவையாற்றும் விமான சேவை நிறுவனங்களுக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டியுள்ளது என தகவகள் தெரிவிக்கின்றன

இதன் விளைவாக பெரும்பாலான விமான நிறுவனங்கள் கொழும்பில் இருந்து தங்கள் விமானங்களை மட்டுப்படுத்துகின்றன என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

கடந்த 3 - 6 மாதங்களில் சரக்கு மற்றும் பயணிகள் பயணங்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளது என்றும் விமானத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இலங்கை வங்கிகள் மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பணம் அனுப்ப முடியாமல் போனதன் விளைவுகள் இவை எனவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது. (நி-6)

# பொலநறுவை-மட்டக்களப்பு வீதியில் விபத்து கணவன்-மனைவி உட்பட மூவர் பலி

(மட்டக்களப்பு)

பொலன்னறுவை-மட்டக்களப்பு பிரதான வீதியின் மனம்பிடியவில் பேருந்து ஒன்று முச்சக்கர வண்டியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் தம்பதி உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டி சாரதியும் அவரது மனைவியும் அதில் பயணித்த பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கரவண்டி மற்றுமொரு பேருந்தை முந்திச் செல்லும்போது எதிரே வந்த பேருந்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா:0 சூரி 10 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: A/L, தனியார் நிதி நிறுவனம்<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்<br>சைவபோசணம் மட்டும்<br>தொ.இ: B/12552 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: சூரி 8 செவ் 4<br>தகைமை/தொழில்:HNDE Following B.Com<br>எதிர்பார்ப்பு: படித்த அரச உத்தியோகம்<br>தொ.இ: G/9468 |
| பிறப்பு: 1982 இந்து நட்சத்திரம் : பூராடம் 1<br>கி.பா: 20 ½ சூரி 12 செவ் 3<br>தகைமை/தொழில்: Software Engineering Following Demas IT (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு : தொழில் செய்யும் பெண்<br>சைவபோசணம் அசைவமும் ஏற்றுக் கொள்ளப்படும்.<br>தொ.இ: B/12554 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: சூரி 8 செவ் 10 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் சொந்த தொழில்<br>தொ.இ:G/9469 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 51 ¼ சூரி. செவ் 12<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:NCT(QS)கட்டட ஒப்பந்த காரர் படவரைஞர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12557 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 19 ½ சூரி 3 செவ் 9 இல்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/ தொழில்: Accounting (UK)<br>எதிர்பார்ப்பு :உயர் பதவி கொழும்பு விரும்பதக்கது தீவுப்பகுதி வடமராட்சி தென்மராட்சி தவிர்க்கவும் சைவ போசணம் மட்டும்<br>தொ.இ:G/9471 |
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 33 ½ சூரி 11 செவ் 1<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: BSC in Surveying Sciences Land Surveyor NCT(QS)<br>எதிர்பார்ப்பு: தகுந்த தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12558 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 1<br>கி.பா: சூரி 9 செவ் 8 உயரம் : 5'6"<br>தகைமை/தொழில் :Diploma in Nursing மருத்துவ தாதி<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் நிரந்தர தொழில்<br>தொ.இ:G/9484 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 34

### முயற்சியுங்கள் ஒருநாள் விதியும் உங்கள் வசமாகும்



தமிழ் நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் நாகலாபுரம் எனும் கிராமத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் 1973ல் பிறந்தவர் பிரேம் கணபதி. பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்த அவருக்கு பிரத்தியேகத் திறன்மகள் எதுவும் கூட இருக்கவில்லை. வறுமையின் நிமித்தம் அந்தக் கிராமத்தில் இருந்து அவரைச் சென்னைக்குத் துரத்தியது. மாத வருமானம் சுமார் ரூ 250/- மட்டுமே கிடைக்க முடிந்த சில்லறை எடுபிடி வேலைகள் செய்து பிழைத்து வந்தார். அதையும் முடிந்த வரை சேமித்து கிராமத்தில் இருக்கும் தன் பெற்றோருக்கு அனுப்பி வைப்பார்.

அப்போது பழக்கமான ஒருவன் மும்பையில் ரூ1200/- மாத வருமானத்தில் வேலை தயாராக இருக்கிறது என்று சொல்ல வீட்டுக்குக் கூடத் தெரிவிக்காமல் அந்த நபருடன் ப்ரேம் கணபதி 1990ல் மும்பைக்கு ரயிலில் பயணமானார். மும்பை பாந்த்ரா புகையிரத நிலையத்தில் அவருடைய சட்டைப்பையில் இருந்த முழு சேமிப்பான ரூ 200/-ஐ திருடிக் கொண்டு கூட வந்தவன் மாயமாய் மறைந்து விட்டான். அப்போது தான் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்கிற உண்மையை ப்ரேம் கணபதி உணர்ந்தார். 17 வயதில் கையில் நயா பைசா இல்லாமல், பாஷையும் தெரியாமல், தெரிந்தவர்களும் யாருமில்லாமல் அனாதரவாய் நின்றார்.

அவர் மேல் பரிதாபப்பட்ட ஒருவர் திரும்பி சென்னைக்குப் போக டிக்கெட் வாங்கிக் கொடுக்க முன் வந்தார். ஆனால் தோற்ற மனிதனாய் சென்னைக்குத் திரும்ப ப்ரேம் கணபதிக்கு மனம் வரவில்லை. மும்பையில் மாஹிம் பகுதியில் ஒரு பேக்கரியில் பாத்திரம் கழுவும் வேலை கிடைத்தது. மாதம் ரூ150/- தான் சம்பளம் என்றாலும் இரவு அந்தப் பேக்கரியிலேயே தூங்க இடம் கொடுத்ததால் அந்த வேலைக்குச் சேர்ந்து கொண்டார் ப்ரேம் கணபதி.

சில மாதங்களில் டீக்கடையில் டீ விற்கிற பையனாய் முன்னேறினார். சுறுசுறுப்பும், முகமலர்ச்சியுடன் பழகுகிற தன்மையும் கொண்ட ப்ரேம் மற்ற டீ விற்கும் பையன்களை விட மூன்று மடங்கு அதிகமாக டீ விற்று வியாபாரத்தைப் பெருக்கினார். நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அளவு தனி ஒருவராக டீக்கடைக்குச் சம்பாதித்துக் கொடுத்தார். ஒரு வாடிக்கையாளர் அதைப் பார்த்து விட்டு ஒரு டீக்கடைக்குத் தான் முதல் போடத் தயார் என்றும் ப்ரேம் கணபதி டீக்கடையை நடத்தினால் வரும் இலாபத்தில் பாதி பாதி எடுத்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார். ப்ரேம் கணபதி ஒத்துக் கொள்ளவே புதிய டீக்கடையைத் துவக்கினார்கள். ப்ரேமின் திறமையால் வியாபாரம் மிக நன்றாக நடந்தது. இலாபம் அதிகமாகிக் கொண்டு வருவதைப் பார்த்தவுடன் இத்தனை பணத்தை இவனுக்குத் தர வேண்டுமா என்று முதல் போட்டவருக்கு பொறாமை ஏற்பட்டது. அவர் ப்ரேம் கணபதியை டீக்கடையில் இருந்து விலக்கி விட்டு சம்பளத்துக்கு இன்னொருவரை வைத்துக் கொண்டார்.

மறுபடியும் ஏமாற்றப்பட்டாலும் மனம் தளராத ப்ரேம் கணபதி ஒரு கைவண்டியை நாள் ஒன்றுக்கு ரூ150/- வாடகைக்கு எடுத்து அது வரை சேர்த்திருந்த ரூ 1000/-ல் குக்கரும், பாத்திரங்களும் வாங்கி வாஷி ரயில் நிலையம் எதிரில் இட்லி தோசை விற்க ஆரம்பித்தார். மிக சுத்தமாக இடத்தை வைத்துக் கொண்டு மிக ருசியாக இட்லி தோசைகளை சமைத்துக் கொடுத்த அவருடைய அந்த சிறிய கைவண்டி தோசைக்கடை நாளடைவில் பிரபலமாகியது. பிறகு கைவண்டியை விட்டு ஒரு கடையையே வாடகைக்கு ப்ரேம் எடுத்துக் கொண்டார். அதற்கு தோசா ப்ளாசா என்று பெயரிட்டார். அவருடையை தோசா ப்ளாசாவைத் தேடி நாளடைவில் தூரத்தில் இருக்கும் வாடிக்கையாளர்களும் வர ஆரம்பித்தார்கள். மிக நல்ல வருமானம் வர ஆரம்பிக்கவே சைனீஷ் உணவு வகைகள் செய்யும் கடை ஒன்றையும் பக்கத்தில் வாடகைக்கு எடுத்துக் கொண்டார். அது தோல்வி அடைய மீண்டும் தோசையிலேயே பல பல வகைகளை அறிமுகப்படுத்தி கடையை விரிவுபடுத்தினார். அவருடைய மெனுவில் 108 வகை தோசைகள் இருந்தன.

வாடிக்கையாளர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் ருசி, சேவை, விதவிதமான தோசை வகைகள், சுத்தம் இருந்தாலும் தரத்தை எப்போதும் உயர்வாகவே தக்க வைத்திருந்ததாலும் அவர் வியாபாரம் செழிக்க ஆரம்பித்தது.

இன்று இந்தியாவில் 45க்கும் மேலான தோசா ப்ளாசாக்கள் ப்ரேம் கணபதிக்கு உள்ளன. அதுமட்டுமல்லாமல் டுபாய், நியூசிலாந்து முதலான பத்து வெளிநாடுகளில் கூட கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முப்பது கோடிக்கும் மேற்பட்ட மதிப்புள்ள சொத்துக்கு அதிபதியாகவும் ப்ரேம் கணபதி இருக்கிறார் என்ற செய்தியைப் படிக்கையில் முயற்சி திருவினை ஆக்கும் என்ற வள்ளுவன் சொன்னது முற்றிலும் உண்மை என்று தோன்றுகிறதல்லவா?

ப்ரேம் கணபதிக்கு துரதிர்ஷ்டம் ஆரம்பத்தில் குடும்ப வறுமையில் வந்தது. அடுத்தது மும்பைக்கு அழைத்துப் போனவனால் வந்தது. அடுத்தது இலாபத்தில் பாதி தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றிய ஒரு வியாபாரியால் வந்தது. ஒவ்வொரு முறையும் எல்லாம் இழந்து போக நேர்ந்தது. ஏமாற்றப்பட்டதையே வருவோர் போவோரிடம் சொல்லி அனுதாபம் தேடிக் கொண்டு நிற்காமல், புலம்பாமல், அடுத்ததாக என்ன செய்து மீள்வது என்று சிந்தித்து, அதற்கு ஏற்றபடி புத்திசாலித்தனத்தோடு சலிக்காமல் உழைத்து அதிர்ஷ்டத்தைப் பெரிய அளவில் ஏற்படுத்திக் கொண்ட ப்ரேம் கணபதியின் வாழ்க்கை பல பேருக்குப் படிப்பினை!

விதி கூடத் தன் சதியால் கதிகலங்கிப் போகாதவனை ஒரு கட்டத்திற்குப் பின் சிலாகித்து உயர்த்தியே விடுகிறது. அதனால் விதி சதி செய்யும் போது தளராமல் தாக்குப்பிடியுங்கள். சிந்தித்து செயற்படுங்கள். ஒன்று சரிப்படாவிட்டால் பாடம் படித்துக் கொண்டு வேறு விதமாக முயற்சி செய்யுங்கள். தொடர்ந்து முயன்று கொண்டே இருங்கள். ஒரு நாள் விதியும் உங்கள் வசமாகும். எல்லாம் உயர்வாய் அமையும்!

# உக்ரைன் ஓ

# ரஷ்யா ஏ

## 200 உக்ரைன் வீரர்கள் உயி

(கீவ்)

**உக்ரைனின் 3வது பெரிய நகரமான ஓ ரஷ்யா ஏவுகணைகளை வீசி தாக்கியது முற்றிலும் சேதமடைந்தது.இந்தத் தா உயிரிழந்ததாக ரஷ்யா அறிவித்தது.**

இந்த நிலையில் நேற்று முன்தினம் ரஷ்யப் படைகளின் இத்தாக்குதலில் 200 உக்ரைன் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து ரஷ்ய இராணுவ தரப்பில் கூறும் போது, "நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் உக்ரைனின் 17 இராணுவக் கட்டமைப்புகள், உயர் துல்லிய ஏவுகணைகள் மூலம் தா கெட்டுகள் மற்றும் பீ வைக்கும் கிடங்கு டது.

விமானப்படை தா க்கும் மேற்பட்ட உ கொல்லப்பட்டனர். 23 அழிக்கப்பட்டன என்று

## உக்ரைன் இராணுவம் குண்டுமழை ரஷ்ய படைக்கு பேரிழப்பு வெளியானது வீடியோ



(கீவ்)

உக்ரைனின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இசியம் என்ற பிரதேசத்தை கைப்பற்றிய ரஷ்ய வீரர்கள் மீது உக்ரைன் படையினர் சரமாரியான குண்டு மழையை பொழிந்து தள்ளி யுள்ளனர்.

இந்த தாக்குதலில் ரஷ்ய இராணுவத்தின் 30க்கும் மேற்பட்ட இராணுவ யுனிட் உபகரணங்கள், பாதிக்கும் மேற்பட்ட டாங்கிகள் மற்றும் எதிரிகளின் குடியிருப்புப் பகுதிகள் ஆகியவற்றை ஏவுகணைகள் கொண்டு அழித்துள்ளதாக உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.மேலும் இதுதொடர்பான வீடியோ ஆதாரத்தையும் உக்ரைன் அரசாங்கம் அதன் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது. (நி-6)

## சீன கொ

(பீஜ

கெ கட்டுப் அரசா முடக்க ரமான அறிவி

மே ப்பாடுக பற்றாத செங்- ற்றுக் ள்ளார்

கடு கட்டுப் மைப் கொ முன் ப்படுத்

## ரஷ்யா கைப்பற்றிய பகுதியில் அதிகாரப்பூர்வ பணமாக "ரூபிள்" அறி

(கீவ்)

உக்ரைனில் கைப்பற்றப்பட்ட பகுதியில் அதிகாரபூர்வ பணமாக ரூபிள் அறிமுகப்படுத்தப்படும் என ரஷ்யா அறிவித்துள்ளது.ரஷ்யா-உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர பல்வேறு நாடுகள் முயற்சித்தபோதும் அந்த முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்து வருகின்றன.

அதேவேளை, உக்ரைனுக்கு அமெரிக்கா உள் ளிட்ட பல்வேறு மேற்கத்தேய நாடுகள் ஆயுத உத செய்து வருகின்றன. இதன தொடர்ந்து நீடித்து வருகிறது. யில், உக்ரைனின் பல்வேறு ரஷ்யா தனது கட்டுப்பாட்டின் வந்துள்ளது.குறிப்பாக, ஹா பாஸ்க் உள்ளிட்ட பகுதிகள் ணுவத்தின் கட்டுப்பாட்டின் கீ இந் நிலையில், ரஷ்யக் க உள்ள உக்ரைன் ஹார்சன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# டேசா விமான நிலையம் மீது ஏவுகணை தாக்குதல்

### பிரிழந்ததாக ரஷ்யா தகவல்

**டேசாவில் உள்ள விமான நிலையம் மீது து. இதில் விமான ஓடுதளத்தின் பாதை தாக்குதலில் 200 உக்ரைன் வீரர்கள்**



ாக்கப்பட்டன. ரொக் - பீரங்கிகள் சேமித்து ங்கும் அழிக்கப்பட்

தாக்குதல்களில் 200 உக்ரைன் வீரர்கள் 23 கவச வாகனங்கள் ன்று தெரிவித்துள்ளது.

உக்ரைனின் 3 ஆவது பெரிய நகர மான ஒடேசாவில் உள்ள விமான நிலை யம் மீது ரஷ்யா ஏவுகணைகளை வீசி தாக்கியது. இதில் விமான ஓடுதளத்தின் பாதை முற்றிலும் சேதமடைந்தது.

தலைநகர் கீவ் அருகே உள்ள புச்சா நகரில் பொது மக்கள் பலர் ரஷ்யப் படை களால் கொல்லப்பட்டனர் என்று உக் ரைன் தெரிவித்து இருந்தது.

ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ள மரியுபோல் நகரில் எக்கு ஆலையில் உக்ரைன் வீரர்கள், பொதுமக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். அவர்கள் சரணடைய மறுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் ஆலையில் இருந்து குழந்தைகள் உட்பட 20 பொதுமக்கள் வெளியேறி வடமேற்கில் 225 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சபோரி ஜியா நகருக்குச் சென்று விட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. (நி-6)

## னாவின் கொவிட் கட்டுப்பாடுகள் காடூரமானவை- தாய்வான் அறிவிப்பு

பீஜிங்)

கொரோனா பரவலை டுப்படுத்த சீன சாங்கம் அறிவித்துள்ள க்க கட்டுப்பாடுகள் கொடூ னவை என தாய்வான் வித்துள்ளது.

மேலும் குறித்த கட்டு டுகளை தாய்வான் பின் ாது என்றும் பிரதமர் சு ங்-சாங் நேற்று ஞாயி க்கிழமை தெரிவித்து ார்.

கடுமையான எல்லைக் டுப்பாடுகள் மற்றும் தனி மப்படுத்தல்களுடன் ாரோனா தொற்றினை ன்னர் தாய்வான் கட்டு டுத்தியிருந்தது.

இருப்பினும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து உள் நாட்டில் ஒமிக் ரோன் மாறுபாட்டால் சுமார் 75,000 நோயாளிகள் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

சில கட்டுப்பாடுகளை தாய்வான் தளர்த்திவரும் நிலையில் அண்டை நாடான சீனா, இதற்கு மாறாக, ஷாங்காயில் கடு மையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இந்நிலையில் நேற்று கருத்து வெளியிட்டுள்ள தாய்வான் பிரதமர், சீனா வைப் போல தாம் கொடூர மாக நாட்டையும் நகரங் களையும் முடக்க மாட்டோம் என தெரிவித்தார். (நி-6)

## ஏராளமான தானியங்களைக் கைப்பற்றியது ரஷ்யப் படைகள்

(கீவ்)

உலகில் தானிய உற்பத்தி அதிகம் உள்ள நாடுகளில் ஒன் றான உக்ரைனில், ரஷ்யப் படை யெடுப்பு காரணமாக தானிய ஏற்றுமதி முடங்கியது.

உக்ரைனின் மீது தொடர் தாக்குதல்கள் நடத்தி வரும் ரஷ்யப்படைகள், தங்கள் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் ஏரா ளமான தானியங்களைக் கைப் பற்றுவதாக உக்ரைன் விவசா யத்துறை அமைச்சர் டாரஸ் பிசோட்ஸ்கி தெரிவித்தார். ஜபோரிஜியா, கெர்சன், டோனட்ஸ்க் மற்றும் லுஹா ன்ஸ்க் பகுதிகளில் இருந்து பல இலட்சம் தொன் தானியங்கள் எடுக்கப்பட்டதாக, அவர் தெரி வித்தார்.



உலகில் தானிய உற்பத்தி அதிகம் உள்ள நாடுகளில் உக்ரைனும்ஒன்று. ஆனால் ரஷ்யப் படையெடுப்பு காரணமாக உக்ரைனில் இருந்து தானிய ஏற்றுமதி முடங் கியது. இதனால் உலக சந்தையில் தானிய விலை உயர்ந்தது. (நி-6)

## ல் றிமுகம்

த விகளைச் தனால், போர் து. இதற்கிடை வறு பகுதிகளை ன் கீழ்கொண்டு ஹார்சன், டான் கள் ரஷ்ய இரா ன் கீழ் உள்ளது. கட்டுப்பாட்டில் சன் மாகாணத் தில் ரூபிள் பணம் அதிகாரபூர்வ பணமாக அறிமுகப்படுத்தப்படும் என ரஷ்ய அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர். முன்னதாக, போர் தொடங்கியபோது உக்ரைனின் பகுதிகளை கைப்பற்றுவது நோக்கம் அல்ல, உக்ரைனின் இராணுவ பலத்தை அழிப்பது மட்டுமே நோக்கம் என ரஷ்யா அறிவித்திருந்த நிலையில் தற்போது கைப்பற்றிய பகுதிகளில் தங்கள் நாட்டு பணத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் போரில் கைப்பற்றிய உக்ரைனின் பகுதிகளை முழுவதும் தங்கள் ஆளுகையின் கீழ்க்கொண்டுவர ரஷ்யா திட்டமிட்டுள்ளது என்பது உறுதி யாகியுள்ளது. (நி-6)

## உக்ரைனுக்கு ஆயுத உதவி வழங்கியது சுவீடன்

### எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா மிரட்டல்

(ஸ்டாக்ஹோம்)

உக்ரைனுக்கு சுவீடன் ஆயுத உதவி வழங்கி வரு வதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்திரு ந்தது.

உக்ரைனை தொடர்ந்து சுவீ டன் மற்றும் அதன் அண்டை நாடான பின்லா ந்து ஆகியவை நேட்டோ அமைப்பில் உறுப்பி னராக முயற்சி செய்து வருகின் றன.

இதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்த நடவடிக்கை ஐரோப்பிய யூனி யன் பகுதியில் ஸ்திரத்தன் மையை பாதிக்கும் என்று ரஷ்ய ஜனாதிபதியின் கிரம்ளின் மாளிகை செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் செய்தியாள ர்களிடம் தெரிவித்திருந்தார். சுவீடன் நடவடிக்கை கூட்டணி மோதலை நோக்கிச் செல்வதா கவும் அவர் குறிப்பிட்டிருந்தார். மேலும் உக்ரைனுக்கு ஆயுத உதவி வழங்க கூடாது என்றும் சுவீடனை ரஷ்யா வலியுறுத்தி இருந்தது.

இந்நிலையில் ரஷ்ய போர் விமானம் அத்துமீறி தங்கள் வான்வெளியில் நுழைந்ததாக சுவீடன் தெரிவித்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மன்னார் மக்கள் கவனயீர்ப்பு


(மன்னார்)

**சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மன்னார் பள்ளிமுனை கிராம மக்கள் பள்ளிமுனை கடற்கரைக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



தொழிலாளர்களின் உரிமை மதிக்கப்படவேண்டும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும், இலங்கையில் தீர்க்க முடியாமல் காணப்படும் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்பட வேண்டும் போன்ற பல வேறு கோரிக்கைகளை முன் வைத்து பள்ளிமுனை மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் பள்ளிமுனை லூசியா ஆலய பங்குத்தந்தை அருட்சகோதரிகள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ மன்னார் நகர சபை உப தலைவர் ஜான்ஸன் உட்பட நூற்றுக் கணக்கான பொதுமக்கள்கலந்து கொண்டனர். (4-6-285)



கிளிநொச்சி புன்னை நீராவி கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு லண்டன் அகிலன் பவுண்டேஷன் தலைவர் கோபாலகிருஷ்ணனால் மார்க்கண்டு சதாசிவம்பிள்ளை என்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பயனாளிக்கு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. (படம்:-தேவானந்தன், யதுபாஸ்கரன்)

# 2.5 கோடி பெறுமதியான கேரள கஞ்சா மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலிற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 130 கிலோ கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கஞ்சா பொதிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு வெளி இடங்களிற்கு அனுப்பும் நோக்குடன் பூநகரி வேரவில் பிரதேசத்தில் உள்ள பற்றைக்குள் மறைக்கப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த கஞ்சா பொதிகளின் பெறுமதி இலங்கை மதிப்பில் 2.5 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த பொதிகள் ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-100315-316)

# ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மூவர் பொலிஸாரால் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மாலை வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக வவுனியாவைச் சேர்ந்த இரு ஊடகவியலாளர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது அதிகமான பொதுமக்கள் வரிசையில் நின்றமையால் அந்த நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களால் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் இருந்த ஊழியர்களுக்கும், அவர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. கருத்து முரண்பாடு முற்றிய நிலையில் தாம் ஊடகவியலாளர்கள் என அவர்களிடம் அறிமுகம் செய்தனர்.

அதனைப் பொருட்படுத்தாத ஊழியர்கள் கடந்த முறையும் எமது நிரப்பு நிலையம் தொடர்பான செய்தியினை நீதானே பிரசுரித்தாய் எனக் கூறி கடுமையாக தாக்கியுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் ஊழியர்களுடன் இணைந்து நிரப்பு நிலையத்தின் முகாமையாளரும் தாக்கியிருந்தார். அத்துடன் அவர்களது மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டு அடித்து துரத்தப்பட்டனர். சம்பவத்தில் காயமடைந்த ஊடகவியலாளர் ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்குச்சென்ற நெளுக்குளம் பொலிஸார் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் உட்பட மூன்று பேரை கைது செய்துள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-250)

# வவுனியாவில் மே தின விழிப்புணர்வு பேரணி




(நெளுக்குளம்)

தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் அரசுக்கு எதிராகவும் பெண்கள் மத்திய ஸ்தானத்தால் வவுனியாவில் நேற்று விழிப்புணர்வு பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக காலை ஆரம்பித்த குறித்த பேரணி மணிக்கூட்டு சந்தியை அடைந்து அங்கிருந்து மீண்டும் பழைய பேருந்து நிலையம் நோக்குச் சென்றது. (4-6-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 340 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 320 |
| தக்காளி | 380 | 350 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 130 | 120 |
| கோவா | 100 | 140 | 140 |
| கரட் | 180 | 160 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 |
| புடோல் | 200 | 150 | --- |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 250-350 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 140 |
| பயற்றங்காய் | 300 | 320 | 240 |
| லீக்ஸ் | 160 | 180 | 160 |
| பீற்றூட் | 160 | 180 | 120 |
| கறிமிளகாய் | 250 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 700 | 700 | 700 |
| போஞ்சி | 400 | 450 | 360 |
| கத்தரிதம்புள்ள | 380 | 250 | 340 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | --- | --- | --- |
| முள்ளங்கி | 60 | 100 | --- |
| பொன்னாங்காணி | 60 | 70 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | --- | --- | --- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்

## இடமாற்றம் இனிமை தரும்!

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: தீ, து, ஓ, ஸ்ரீ, தே, தொ, சு உள்ளவர்களுக்கும்

**மீன இராசி வாசகர்களே!**

இந்தப் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் குரு, இராசியிலேயே பலம் பெற்று சஞ்சரிப்பதால் ஆரோக்கியம் சீராகும். அதிஷ்ட வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். வருமானப் பற்றாக்குறை அகலும். வாகன மாற்றம், இடமாற்றம், தூரதேசப் பயணங்களால் ஆதாயம், புதிய நண்பர்கள் மூலம் தொழில் வளர்ச்சி போன்றவை ஏற்படும் நேரம் இது. ஆயினும் சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் சஞ்சலங்களும், மன அமைதிக் குறைவும் இருந்து கொண்டேயிருக்கும்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். சனியும் இலாப ஸ்தானத்தில் சொந்த வீட்டில் சஞ்சரிக்கிறார். சூரியன், புதனோடு சேர்ந்து 'புத ஆதித்ய யோக'த்தையும், சுக்கிரனோடு செவ்வாய் இணைந்து 'சுக்கிர மங்கள யோகத்தை'யும் உருவாக்குகின்றன. செவ்வாயை சந்திரன் பார்ப்பதால் 'சந்திர மங்கள யோகமும்', குருவிற்கு 6 ஆம் இடத்தில் சந்திரன் இருப்பதால் 'சகட யோகமும்' ஏற்படுகிறது. இத்தனை யோகங்களுக்கு மத்தியில் பிறக்கும் இந்தப் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் குரு, சொந்த வீட்டில் இருப்பது தான் சிறப்பு.

இலாப ஸ்தானத்தில் சனி இருப்பதால் இலாபம் சிறப்பாக இருக்கும். தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து தொழிலை வளப்படுத்திக் கொடுக்க முன்வருவர். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வரலாம். பயணங்கள் அதிகரிக்கும். முன்னோர்களால் கட்டமைக்கப்பட்டு, தற்போது சிதிலமடைந்திருக்கும் கோவில்களை பராமரிக்க முன்வருவீர்கள்.

விரய ஸ்தானத்தில் செவ்வாய், சுக்கிரன் சேர்க்கை பெற்றிருப்பது நன்மைதான். எட்டுக்கு அதிபதி சுக்கிரன் பன்னிரண்டாம் இடத்தில் இருப்பதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப, எதிர்பாராத சில முக்கிய முடிவுகளை எடுத்து அதை வெற்றியாக்குவீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். வழக்குகள் சாதகமாகும். வாசல் வரை வந்து திரும்பிய வரன்கள், மீண்டும் வந்துசேரும்.

அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் மீண்டும் கிடைக்கப் பெறும். தொழில் வளர்ச்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சூரியன், புதன், ராகு ஆகிய மூன்று கிரகங்கள் இருக்கின்றன. எனவே கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம்.

'புத ஆதித்ய யோகம்' இருப்பதால் படிப்பில் மேன்மையும், விருது வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். அஷ்டமத்தில் கேது இருப்பது நல்லதல்ல. ஒருசில காரியங்கள் நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கலாம். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும். தெய்வ வழிபாடுகள் செய்வதில் கூட தாமதங்கள் உருவாகும். இக்காலத்தில் சர்ப்ப தோஷ நிவர்த்திக்குரிய பரிகாரங்களைச் செய்வது நல்லது.

ஜென்மத்தில் குரு இருப்பதால் இடமாற்றம், ஊர் மாற்றம், தூரதேசப் பயணம் போன்றவற்றில் மாற்றங்கள் உருவாகலாம். வரும் மாற்றத்தை உபயோகப்படுத்திக் கொள்வது நன்மைதான். உத்தியோகத்தில் உள்ளவர்கள், வேலைப்பளுவின் காரணமாக விலகுவது பற்றி சிந்திப்பார்கள்.

'சுயதொழில் செய்யலாமா?' என்று நினைக்கும் நேரம் இது. ஆனால் ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் தொடங்கப்பேரவதால், கூட்டுத் தொழில் செய்வதே நல்லது. கூட்டாளியின் ஜாதகத்தையும் ஆராய்ந்து அவர்களை தேர்ந்தெடுத்துக் கொள்வது உத்தமம்.

**குருவின் பார்வை பலன்**

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம்பெறுகின்றது. பூர்வீகச் சொத்துத்




தகராறுகள் அகலும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமைப்படும் வகையில் இருக்கும்.

குருவின் பார்வை 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால், இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெற வழி பிறக்கும். உயர் அதிகாரிகள் உங்கள் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுப்பர்.

வீடு மாற்றம் திருப்தி தரும். வெளிநாடு செல்ல நினைப்பவர்களுக்கு அழைப்புகள் வரலாம். பார்க்கும் குருவைப் பலப்படுத்த, சிறப்புத் தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**சனியின் வக்கிர காலமும், பெயர்ச்சிக் காலமும்**

25.5.2022 முதல் 9.10.2022 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். சனியின் வக்கிர காலத்தில் விரயங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு முயற்சி தடைப்படும். 29.3.2023 இல் கும்ப இராசிக்கு சனி செல்கிறார். இந்தப் பெயர்ச்சிக்குப் பின்னர், உங்கள் இராசிக்கு ஏழரைச் சனி தொடங்குகிறது. எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். வைத்தியச் செலவுகள் வாடிக்கையாகும். இந்த காலகட்டத்தில் தன்னம்பிக்கையை மட்டும் தளரவிட்டு விடாதீர்கள்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**


இந்தப் புத்தாண்டில் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருகவசம் பாடிக் குருவை வழிபடுவதோடு, அபிராமி அம்மன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் உங்கள் இராசிநாதன் குரு, உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே உடல் நலம் சீராகும். உறவினர்களின் உதவி கிடைக்கும். உயர்ந்த மனிதர்களின் பழக்கத்தால் தொழில் முன்னேற்றம் உண்டு. கணவன் - மனைவி உறவில் அன்னியோன்யம் அதிகரிக்கும். எதிர் அணியில் நின்றவர்கள், விலகுவர். அசையாச் சொத்துக்களும், அழகான வாகனமும் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## மூன்று வரங்கள்

மலையன் ஒரு ஏழையின் மகன். மகாசோம்பேறி. ஒரு வேலையும் செய்யாமல் ஊர் சுற்றி வந்தான். அவன் தந்தை எப்படியோ பாடுபட்டு சம்பாதித்து அவனைப் பெரியவனாக்கி விட்டான். குடும்பம் நடத்துவது மிகவும் சிரமமாகி விடவே அவன் மலையனை அதே ஊரில் யாரிடமாவது வேலைக்கு அமர்த்த எண்ணி அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

ஆனால் அந்த ஊரில் யாரும் மலையனுக்கு வேலை கொடுக்க முன்வரவில்லை. முடிவில் அவன் மலையனை அவ்வூர் மணியகாரனின் வீட்டில் கொண்டு போய் வேலைக்குச் சேர்த்தான்.

மணியகாரரிடம் ஒரு வேலைக்'காரன் கூட நிலைத்து இருந்ததில்லை காரணம் அவர் வேலைக்காரனுக்கும் சம்பளம் கொடாமலே வேலை வாங்கியது தான்.

மலையனுக்கு இரண்டு வேளை சாப்பாடு கிடைத்ததேயொழிய சம்பளம் கிடைக்கவில்லை. அவன் மூன்று வருடங்களானதும் தான் வேலையில் இருந்து நிற்பதாக அவரிடம் கூறினான். மணியகாரரும் மூன்று ரூபாய் கொடுத்து 'உன் கணக்குத் தீர்ந்தது' என்றார்.

அப்போது மலையன் "மூன்று வருடங்கள் வேலை செய்தும் ஒரு நல்ல துணி மணி எடுத்துக் கொடுக்கவில்லை. சம்பளமும் இவ்வளவு தானா!" என்று கேட்டான். மணிகாரரனோ "அதெல்லாம் கிடையாது இது கொடுத்ததே அதிகம் போ போ" என்று விரட்டி விட்டார்.

மலையன் அந்த மூன்று ருபாய்களோடு அருகில் உள்ள நகருக்குக் கிளம்பினான். அதற்கு ஒரு கணவாய் வழியே போயாக வேண்டும் அவன் அக்கணவாயில் கொஞ்ச தூரம் போனதுமே ஒரு உயரமான யாசகன் அவனைப் பார்த்து 'எனக்கு ஒரு ரூபாய் கொடு' என்றான்.

மலையனோ "என்னிடம் இருப்பது மொத்தமே மூன்று ரூபாய் தானே". எனவே அவன் "அதில் ஒன்றைக் கொடு மீதம் உனக்கு இரண்டு ரூபாய் இருக்கிறதே நீ கொடுக்கும் ரூபாயில் உடுத்த நல்ல துணி வாங்கிக் கொள்வேன்" என்றான்.

மலையனும் மனம் இளகி அவனுக்கு ஒரு ரூபாயைக் கொடுத்து விட்டுச் சென்றான்.

இன்னும் சற்றுத் தூரம் போனதும் அவன் முதலில் கண்ட யாசகனைவிட கொஞ்சம் உயரமான மற்றொரு யாசகனைக் கண்டான்.

அவனும் முதலாவது யாசகனைப் போலப் பேசி மலையனிடம் இருந்து ஒரு ரூபாயை வாங்கிக் கொண்டு விட்டான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்




"இவனிடமிருந்து உயிர் தப்ப முடியாது" என்று இராமன் முடிவு செய்தான்; அதற்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டான்; இலக்குவனை மட்டும் தப்பித்துச் செல்லும்படி வேண்டினான்.

"சீதையைப் பிரிந்தேன்; சடாயுவை இழந்தேன்; கொடும் பழிக்கு உள்ளாகிவிட்டேன்; இனியும் உயிர் வாழ்வது தக்கதன்று; இந்தப் பூதத்துக்கு உணவு ஆவதுதான் உத்தமம்; எந்த முகத்தை வைத்துக் கொண்டு சனகன் முகத்தைப் பார்க்க முடியும்? அயோத்திக்குத் திரும்பச் சென்றால் ஆட்சியைப் பிடித்து அரசாள ஆசையுடையவன் என்று பேசுவர்".

"மனைவியைக் காக்கத் திறனில்லாத இவன், வாழ்ந்து என்ன பயன்? மானங்கெட்டவன்; என்று பேசுதற்கு முன் உயிர்விட்டால் என் பழி தீரும்" என்று கூறினான்; இலக்குவன் அதை மறுத்து ஆறுதல் கூறினான்.

"துயரத்தில் உன்னைத் துவளவிட்டு நான் மட்டும் எப்படித் திரும்புவேன்? என் அன்னை சுமத்திரை, 'முன்னம் முடி; இறப்பை ஏற்றுக்கொள்' என்று சொல்லி என்னை அனுப்பினாள்; அவள் முகத்தில் நான் எப்படி விழிக்க முடியும்?"

"போருக்கு அஞ்சி உயிர் விட்டாய், என்ற பெரும்பழி உன்னைச் சாராதா? இந்த பூதம் என்ன? இதைவிட அஞ்சத்தக்க விலங்கு வந்தாலும் நம் வாள் முன் எம்மாத்திரம்? துணிந்து எதிர்த்தால் இது செத்து மடிவது உறுதி என்று கூறிய வண்ணம் இலக்குவன் முன்னேறினான். இராமனுக்குப் புதிய உற்சாகம் தோன்றியது; விண்ணை முட்டும் அதன் தோள்களை வாள் கொண்டு வெட்டினர், அருவி பொழியும் மலைபோல் குருதி கொட்ட நின்றது.

அவ்வரக்கவடிவு ஆற்றல் இழந்து, செயல் இழந்து இராமன் பெருமையை உணர்ந்து பலவாறு துதித்தது. அடக்கமாய் இராமனை வழிபட்டது. சீதையைக் காணும் சீரிய முயற்சிக்கு உதவ எண்ணியது.

அது அரக்க உருவம் நீங்கிக் கந்தருவனாக மாறிற்று.

"நீ யார்?" என்று இலக்குவன் கேட்டான்.

"தனு என்னும் நாமம் உடையவன் நான்; ஒரு முனிவன் சாபத்தால் இக் கடைப்பட்ட அரக்கப் பிறவியை எடுத்தேன்; உங்கள் மலர்க்கை தீண்டப் பழைய வடிவம் பெற்றேன்".

"புணை இல்லாமல் வெள்ளத்தைக் கடக்க இயலாது; அது போலத் துணையில்லாமல் நீர் உம் பகையை அடக்க முடியாது. சிவனும் போற்றத்தக்க ஆற்றல் மிக்க பூதகணங்களை இராவணன் பெற்றுள்ளான்; அது போல நீங்களும் துணை பெற்று எடுத்த பணியை முடிக்க வேண்டும். அதற்குத் தக்கவன் சுக்கிரீவனும் அவன் வானர சேனைகளுமே ஆவர்" என்றான்; அவ்வாறே செய்வதாகக் கூறி மதங்க முனிவனது மலையைச் சேர்ந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலாக நேர்வழியில் வாழ்ந்தால் பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல, எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள்.
– நேருஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யுத்த காண்டத்தில் அப்படி அரசியல் காப்பியத்தில் இப்படி

யுத்த காண்டத்துக்கும் அரசியல் காப்பியத்துக்கும் இடையிலான வித்தியாசம் என்ன? என்று யாரேனும் கேட்டால், யுத்த காண்டத்தில் யுத்தத்தின் முடிவு என்பது போர்க்களத்தில் ஒரு தரப்புத் தலைவனின் மரணத்தோடு யுத்தம் முற்றுப் பெறும்.

அரசியல் காப்பியத்தில், ஆட்சித் தலைவனை முதலில் பதவி இறக்கம் செய்வதன் மூலம் அந்த ஆட்சி முடிவுக்கு வரும் என்பது தான் இரண்டுக்குமான வித்தியாசம்.

இதனைச் சற்று விரிவாகக் கூறுவதாயின்,

குருசேத்திரத்தில் துரியோதனனின் மரணத்தோடு மகாபாரதப் போர் முடிவுக்கு வருகிறது.

துரியோதனனைக் கொல்வதற்கு முன்னதாக வீஷ்மர், கர்ணன், துரோணர் மற்றும் துரியோதனாதியர் உட்படப் பலரும் கொல்லப்படுகின்றனர்.

ஈற்றில் துரியோதனனின் இறப்போடு குருசேத்திரப் போர் முடிவுக்கு வருகிறது.

யுத்தத்தில் யுத்த தலைவன் முதலில் இறந்து, துணைத் தலைவர்களுடன் போர் நடத்துவதான நடைமுறை வழக்கத்தில் இல்லை.

இதேபோல் அரசியல் களத்தில், ஓர் அரசாங்கத்தை – ஆட்சியை பதவி இறக்கம் செய்வதாயின் முதலில் ஆட்சிப்பீடத்திலுள்ள அரசியல் தல்லவனைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

அதாவது அரசியல் தலைவனை பதவி நீக்கம் செய்வதன் மூலம் அவனுடைய ஆட்சியை – அரசியல் கட்டமைப்பை நிர்மூலமாக்கி விட முடியும்.

இந்தவகையில் இலங்கையின் அரசியலை எடுத்துக் கொண்டால், ஆட்சித் தலைவனாக இருக்கக்கூடிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறே மக்கள் போராட்டம் எழுச்சி பெற்றது.

**கோட்டா கோ கம** என்ற கோசத்தோடு உத்வேகமடைந்த எழுச்சிப் போராட்டம் நீண்டு செல்கின்றதாயினும் அந்தக் கோசம் இப்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு மாற்றம் பெறுகிறது.

இங்குதான் நாம் உன்னிப்பாக ஒரு விடயத்தை அவதானிக்க வேண்டும்.

அதாவது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தாலும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே அரசியல் தலைவராக விளங்குகிறார்.

எனவே பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைப் பதவி நீக்கம் செய்துவிட்டால், அதன் பின்னர் ஜனாதிபதி கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புவது சுலபமாகிவிடும் எனக் கருதப்படுகிறது.

இந்த அடிப்படையில் தென்னிலங்கையில் உருவாகியுள்ள அரசியல் தாழமுக்கம் ஒரு சில நாட்களில் இடிமுழக்கம் கனமழையாக கொட்டி முழங்கும் எனக் கூறுவதில் தவறில்லை எனலாம்.

# ஊழலில் ஈடுபட்டவர்களுடன் இடைக்கால அரசை அமைத்தால் எதிர்ப்போம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

**நாட்டில் கடந்த காலங்களில் மோசடி அல்லது ஊழல் குற்றச்சாட்டில் சம்மந்தப்பட்ட நபர்களுடன் எதிர்காலத்தில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டால் அதற்கு எதிர்ப்பு வெளியிடுவோம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பகிரங்கக் கடிதம் ஒன்றை கையளித்துள்ளதாக அச்சங்கத்தின் உறுப்பினர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வ கட்சி அல்லது இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும்போது அரசாங்கம், பொதுமக்கள் மற்றும் நாட்டின் ஸ்திரத்தன்மையை நினைவில் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அந்தவகையில் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தும் பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் தூய்மையான அரசியலை மேற்கொள்ள வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (4-7)

## சுதந்திரமாக செயற்பட முடியவில்லை

# காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலக பதவியிலிருந்து விலகினார் சட்டத்தரணி சிராஸ்

(கொழும்பு)

காணாமல்போனோர் தொடர்பிலான அலுவலகத்துக்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரான சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் அப்பதவியிலிருந்து ராஜிநாமா செய்துள்ளார். இது குறித்த கடிதத்தை அவர் நான்கு பிரதான காரணிகளை முன் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களுக்கு, காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக எந்த நன்மை பயக்கும் விடயங்களையும் முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், அவ்வலுவலகத்தில் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை என குறிப்பிட்டே இந்த இராஜிநாமா கடிதத்தை அனுப்பியுள்ளார்.

கடந்த 2021 டிசம்பர் 13 ஆம் திகதி சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகத்தின் (ஓ.எம்.பி) உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இந் நிலையிலேயே சுமார் நான்கு மாத காலத்துக்குள்ளேயே அவர் அப்பதவியிலிருந்து ராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பிலான. அலுவலகம் சுதந்திரமாக செயற்படுவதற்கு அரசாங்கம் போதுமான அனுசரணையை அளிக்கவில்லை என ராஜிநாமா கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், ஒருங்கிணைந்த நிதியின் மூலம் போதுமான நிதி ஒதுக்கீடுகளை செய்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அது செய்யப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகத்தின் மீது நீதி அமைச்சின் தலையீடுகள் ஒப்புக் கொள்ளப்பட்டதன் பிரகாரம் அலுவலகத்துக்கு தேவையான உதவிகளை வழங்க வெளிவிவகார அமைச்சு தவறியமை, காணாமல் போனோர் அலுவலகத்தின் நடவடிக்கைகளை செயற்திறனாக முன்னெடுப்பதை கட்டுப்படுத்தும் அந்த அலுவலகத்தின் தற்போதைய யாப்பு உள்ளிட்ட காரணிகளை தனது ராஜிநாமாவுக்கான காரணிகளாக சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் முன் வைத்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் காணாமல் போனோர் அலுவலகம் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த உதவியினையும், நிவாரணத்தினையும் வழங்க முடியாது போயுள்ளதாகவும் அதனால் தான் ராஜிநாமா செய்வதாகவும் குறித்த கடிதத்தில் சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் குறிப்பிட்டுள்ளார். (4-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## எண்ணத்தின் ஆற்றல்



இவ்வாறு ஒரு தடவை ஒருவர் எண்ணும் எண்ணத்தால் ஏற்படும் உடல், மூளை, தன்னுயிர், பிற உயிர், சமஷ்டி உயிர்ப் பதிவுகள் திரும்பத் திரும்பப் பிரதிபலிப்பாகும் போது எண்ணம் தோன்றிய இடத்திலேயே இதிக ஆழமாகச் செயலாவது இயல்பு. சமுதாயத்தைப் பற்றியோ தனிப்பட்ட பிறரைப் பற்றியோ எண்ணும் எண்ணங்கள் உரியவரிடம் அதிக அழுத்தமாகத் திரும்பத் திரும்பப் பிரதிபலிக்கும்.

பல தடவை திருவிழாவிற்குப் போக வேண்டுமென்ற எண்ணம் பிரதிபலிக்கும் போது எண்ணத்திற்குச் செயலாற்றவல்ல போதிய வலு ஏற்பட்டு விடும். இந்த எண்ணத்தால் ஏற்பட்ட உயிராற்றல், விரைவு அதிர்வு அலைகள், உடல் கருவிகளையெல்லாம் ஊக்கி எண்ணத்தைச் செயலாற்றத் தயார் நிலையை ஏற்படுத்திவிடும். பிறகு திருவிழாவிற்குப் போய் பார்த்துக் களிக்கும் செயல் மலர்கின்றது. அதனால், இன்ப துன்ப அனுபவங்கள் பதிவாகின்றன. இவ்வாறு செயலாகப் பதித்த எண்ணமும், செயலும் தேவையாக, பழக்கமாக, சூழ்நிலைக் கவர்ச்சியாக மாறி, அடிக்கடி மனிதனைச் செயற்படுத்துகின்றன. இந்த விளக்கத்தைக் கொண்டு ஒரு எண்ணம் எவ்வாறு பதிவு, பிரதிபலிப்பு, செயலாற்றல், இன்ப துன்ப விளைவுகள் என்ற நான்காக மாற்றம் பெறுகிறது என்பதை நன்குணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தேவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 55

**இரண்டு பிரேரணைகள் 30% முஸ்லிம் சமூகத்தாரை உள்ளடக்கியுள்ள குளியாபிட்டிய கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு ஒரு தேர்தல் தொகுதியை பரிந்துரைத்திருந்தன. இந்தப் பிரேரணைகளை குளியாபிட்டிய கிழக்கு தேர்தல் தொகுதியை நிறுவும்போது முடிந்தளவு குழு சேர்த்துக்கொண்டுள்ளது**

இரண்டு பிரேரணைகள் 30% முஸ்லிம் சமூகத்தாரை உள்ளடக்கியுள்ள குளியாபிட்டிய கிழக்கு பிரதேச செயலகப் பிரிவு ஒரு தேர்தல் தொகுதியை பரிந்துரைத்திருந்தன. இந்தப் பிரேரணைகளை குளியாபிட்டிய கிழக்கு தேர்தல் தொகுதியை நிறுவும்போது முடிந்தளவு குழு சேர்த்துக்கொண்டுள்ளது.

பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று பிரேரணைகளில் மாகாணசபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைப்பதற்கும் மற்றும் கூட்டுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. அது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை என்பதால் குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

**பெற்றுக்கொள்ளப்பட்ட மூன்று பிரேரணைகளில் மாகாணசபையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைப்பதற்கும் மற்றும் கூட்டுவதற்கும் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. அது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாகவும் அமையவில்லை என்பதால் குழுவினால் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.**

தொகுதிகளுக்கு பெயரிடும்போது, சரித்திர பிரசித்திபெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத்தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இடத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இந்தப் பெயர்கள் தேர்தல் தொகுதி பெயர்கள் குறிப்பிட்டு கிடைக்கப்பெற்ற ஒரு பிரேரணைக்கு ஒத்துப் போகிறது.

சுருக்கமாகக்கூறினால் 17 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 11 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டு, 2 பிரதேச செயலகப் பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக் கப்பட்டும், தொகுதிக்கான சராசரி மக்கள் தொகையை விட்டு −5.6% மற்றும் +6.8% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து குருநாகல் மாவட்டம் 17 ஒற்றை அங்கத்துவத் தொகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அத்தொகுதிகள் கல்கமுவ(113), பொல்பித்திகம(111), மாகோ(118), நிக்கவெரட்டிய(110), வாரியப்பொல(91), குருநாகல்வடக்கு(90), இப்பாகமுவ(80), ரிதீகம(116), மாவத்தகம(104), குருநாகல் தெற்கு(58), பொல்கஹவெல(114), அளவ்வ(95), குளியாபிட்டியகிழக்கு(82), பண்டுவஸ்நுவர(99), குளியாபிட்டியமேற்கு(83), பிங்கிரிய(78), பன்னல(68) என்பனவாகும். அடைப்புக்குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விவரம் அட்டவணை (P2) இல் தரப்பட்டுள்ளது.

**சுருக்கமாகக்கூறினால் 17 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 11 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 2 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப்பிரதி நிதித்துவத்தை பாதுகாத்து குருநாகல் மாவட்டம் 17 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது**

### புத்தளம் மாவட்டம் பற்றிய தகவல்கள்

வட அகலாங்கு 7°16' மற்றும் 8°34' இடையிலும் கிழக்கு நெட்டாங்கு 79°41' மற்றும் 80°9' இடையிலும் அமையப் பெற்றுள்ள புத்தளம் மாவட்டம், 3,072 சதுர கிலோ மீற்றர் பரப்புக் கொண்டதாகும்.

இம் மாவட்டம் வடமேல் மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 38.9 வீதம் வரை பரந்து காணப்படுகின்றது. 2,882 சதுர கிலோ மீற்றர் தரைப் பிரதேசத்தையும் 190 சதுர கிலோமீற்றர் நீர்ப்பரப்புப் பிரதேசத்தையும் கொண்டுள்ளது.

இம்மாவட்டத்தின் உள்ளக நீர்ப்பரப்பு மொத்தப்பரப்பின் 6.2% ஆகும். வடக்கே மன்னார் மாவட்டத்தையும், தெற்கே கம்பஹா மாவட்டத்தையும், கிழக்கே அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களையும் மேற்கே கடலையும் எல்லையாகக் கொண்டமைந்துள்ளது.

**அட்டவணை (P2)- குருநாகல் மாவட்ட தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்**

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| கல்கமுவ | 91255 | 595 | 6558 | 226 | 98634 |
| மாகோ | 95543 | 380 | 3409 | 149 | 99481 |
| நிக்கவெரட்டிய | 87101 | 466 | 6177 | 51 | 93795 |
| பொல்பித்திகம | 99426 | 86 | 121 | 82 | 99715 |
| இப்பாகமுவ | 84549 | 641 | 4531 | 119 | 89840 |
| வாரியப்பொல | 92333 | 336 | 4699 | 32 | 97400 |
| பிங்கிரிய | 87366 | 876 | 6735 | 44 | 95021 |
| பண்டுவஸ்நுவர | 82507 | 424 | 9009 | 47 | 91987 |
| குளியாபிட்டிய மேற்கு | 93620 | 1034 | 1990 | 103 | 96747 |
| பன்னல | 92423 | 1021 | 6186 | 102 | 99732 |
| குளியாபிட்டிய கிழக்கு | 72647 | 814 | 20833 | 102 | 94396 |
| அளவ்வ | 93199 | 364 | 434 | 49 | 94046 |
| பொல்கஹவெல | 82522 | 1886 | 5779 | 163 | 90350 |
| குருநாகல் வடக்கு | 86355 | 968 | 2928 | 278 | 90529 |
| குருநாகல் தெற்கு | 75525 | 3538 | 13209 | 794 | 93066 |
| மாவத்தகம | 85295 | 3605 | 2839 | 276 | 92015 |
| ரிதீகம | 78197 | 3601 | 19865 | 48 | 101711 |
| மொத்தம் | 1479863 | 20635 | 115302 | 2665 | 1618465 |




2010 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டவாறு மாவட்டத்தின் வனப் பிரதேசம் அதன் மொத்தப் பரப் பில் (27%) 842 சதுர கிலோ மீற்றராகக் காணப் பட்டது.

இந்த மாவட்டத்தின் அதி கூடிய உயரம் கடல் மட்டத்திற்குமேல் 250+ மீற்றர் ஆகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலமைப்பு...

டாலும் நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவும் பொருளா தார நெருக்கடி காரணமாக பலர் வேலையை இழந்துள்ளனர். டொலர் தட்டுப்பாடு மற் றும் மோசமான நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக அரசாங்கம் ஸ்திரமற்ற நிலைக்குச் சென்றுள்ளதாகவும், இதனால் மக்களின் அன்றாட வாழ்வில் எரிவாயு, உணவு, எரிபொருள் மற்றும் மின்சாரம் போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள் ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கூற்றுப்படி, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டாலும், 21ஆவது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலும், எந்த மாற்றமும் ஏற்படாது.

20ஆவது திருத்தச் சட்டத்தில் தமக்கு விருப்பம் இல்லை எனவும் 21ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதால் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டி யெழுப்புவது கடினம்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சரி யான முடிவுகளை எடுத்தால் 2023ஆம் ஆண் டின் இறுதிக்கு முன்னர் இலங்கை யின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடி யும்.

பழைய அரசியலில் இருந்து விடுபட்டு புதிய பயணத்திற்காக அனைவரும் இணைந்து போராட வேண்டும் எனத் தெரிவித்தார். (4,7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1241
வெற்றி இலக்கங்கள்
தனுசு 3 9 6 5 5 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1097
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
C 19 01 34 42 56

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.01
சீட்டிழுப்பு இலக்கம் 058
கடகம் 06 07 13 37 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/05/01
சீட்டிழுப்பு இலக்கம் 4749
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
M 5 4 7 0 9 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.05.01
சீட்டிழுப்பு இலக்கம் - 779
J 02 47 56 78
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்


## தடுப்பூசி...

கள் செல்ல முழு கொரோனாத் தடுப்பூசியும் பெற்றிருக்க வேண்டும் என கட்டாயப் படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் இரத்துச் செய் துள்ளது.

ஏப்ரல் 30, 2022 முதல் பொது இடங் களுக்கு பொதுமக்கள் செல்ல முழு கொரோ னாத் தடுப்பூசியும் பெற்றிருக்க வேண்டும் என கட்டாயப்படுத்தி முன்னதாக வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (4,7)

## மே தின...

சக்தியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொம்பே பகுதியில் இருந்து பேரணி யில் கலந்து கொள்ள வருகைத் தந்த 65 வயதுடைய முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். (4,7)

## நாடளாவிய ரீதி...

சர்வதேச மே தினத்தை முன் னிட்டு நேற்றைய தினம் பிரதான அரசியல் கட்சிகள் உட்பட தொழிற் சங்கத்தினரும் சிவில் அமைப்பினரும் மே தினக் கூட்டங் களையும் பேரணிகளையும் நடத்தினர்.

இம்முறை மே தினக் கூட்டத்தில் அர சாங்கத்திற்கு எதிரான கோசங்கள் தீவிர மாக ஒலித்ததை அவதானிக்க முடிந்தன.

ஆளும் கட்சியான ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன இம்முறை கட்சி என்ற ரீதி யில் மே தின கூட்டத்தையும் பேரணி களையும் நடத்தவில்லை. பொதுஜன பெரமுனவின் தொழிற்சங்கத்தினர் ஏற் பாடு செய்த தொழிற்சங்கக் கூட்டம் கொழும் பில் எவ்வித ஆரவாரங்களுமின்றிய வகையில் இடம்பெற்றது.

பிரதான எதிர்க்கட்சிகளின் மே தினக் கூட்டம் மற்றும் மே தினப் பேரணிகள் தலைநகரான கொழும்பினை இலக்காகக் கொண்டு இடம்பெற்றது.

கொழும்பு கோட்டை புகையிரத நிலை யத்தின் முன்பாக அரசியல் மற்றும் சிவில் தொழிற்சங்கத்தினரது மே தினப் பேரணி கள் இடம்பெற்றன. (4,7)

## நம்பிக்கையில்லா...

மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மே தினப் பேரணியில் கலந்துகொண்ட பாராளு மன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார். (4,7)

## நாளை...

வுள்ளனர்.

இலங்கையில் புனித சவ்வால் மாதத் திற்கான தலைபிறை தென்படவில்லை என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழு அறிவித்துள்ளது.

புனித சவ்வால் மாதத்திற்கான தலை பிறை பார்க்கும் மாநாடு நேற்று மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெற் றிருந்தது.

இதன்போது நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பிறை தென்பட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப் பெறவில்லை என கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக் குழு அறிவித்த நிலையில், இஸ்லாமியர் கள் இன்று நோன்பு நோற்று நாளை 3ஆம் திகதி புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடவுள்ளனர். (4,7)

## புதிய அரசாங்...

கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது ஆட்சிக் காலத்தில் நாட்டில் இது போன்று எவ்விதமான சூழ்நிலையும் இருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட் டினார். தனது ஆட்சியின் பின்னர் மிகவும் நல்லதொரு நாட்டை ராஜபக்ஷக் கள் கைப் பற்றியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் புதிய அரசாங்கத்தை அமைப்பதே தமது நம்பிக்கை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4,7)

## மீண்டும்...

பொருள் தட்டுப்பாடு ஏற்படும் என இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி ஊர்தி உரி மையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தாம் கோரும் 60% கட்டண திருத்தம் தமக்கு கிடைக்கவில்லை என்ற காரணத் தினால் நேற்று முன்தினம் முதல் தனி யார் எரிபொருள் தாங்கி ஊர்தி உரிமை யாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட் டுள்ளனர்.

இந்தநிலையில் எரிபொருள் போக்கு வரத்து நடவடிக்கைகள் இடைநிறுத்தப் பட்டதன் தாக்கம் இன்று முதல் உணரப் படும் என அவர் தெரிவித்தார்.

எனினும் நிலைமையை சமாளிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படும் என்று அமைச்சர் காஞ்சன விஜயரத்ன தெரிவித் துள்ளார். (4,7)

## இலங்...

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சுமப்பதற்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியும் தயாராகவே இருக்கின்றார் என இந்தியாவின் ஆளுங்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவரான அண்ணாமலை தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தின நிகழ்வு நேற்று கொட்டகலை சி.எல்.எவ்.வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியின்கீழ் முழு உலகமும் இந்தியாவை திரும்பிப் பார்க்கின்றது. இந்தியா என்பது வல்லரசு நாடாக மாறியுள்ளது. உலகில் 5 ஆவது மிகப்பெரிய பொருளாதார பலமுடையநாடாக மாறியுள்ளது. ரஷ்யா, உக்ரைனுக்கிடையில் மோதல் ஏற்பட்டபோதுகூட, உக்ரைனில் வாழ்ந்த இந்தியர்களை சிறு காயமின்றி மீட் டெடுத்தார்.

இலங்கையை அருகிலுள்ள நாடு, எமது சொந்தங்கள் வாழும் நாடு என இரு கோணத்தில் இந்தியா பார்க்கின்றது. அதனால்தான் நெருக்கடியான கட்டங் களில் உதவிகள் வழங்கப்படுகின்றன. உயிர் காப்பு மருந்து தேவை என்று சொன்னபோது, 107 வகையான 760 கிலோ மருந்துகளை அனுப்பி வைத்துள் ளோம். எதிர்காலத்திலும் உதவுவோம். மலையக மக்களுக்கான உதவிகளும் தொடரும். நாம் வளரும் அதேவேளை, எமது தொப்புள்கொடி உறவுகளையும் வளர வைப்போம். மலையகம் கல்வியால் உயர வேண்டும். அதற்கான உதவிகளும் தொடரும் எனத் தெரிவித்தார். (4,7)

## வடக்கு...

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய மே தினப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கை தமிழர் தேசமாக அங்கீகரியுங்கள். தமிழர்களே பூர்வீக குடிகள் என அறிவியுங்கள். தமிழர்களுக் குரிய கலாசாரம், மொழி, பண்பாடு, அடை யாளம் என்பவற்றுடன் வாழ வழிவகை செய்யுங்கள்.

இவ்வாறு உங்களால் செய்ய முடியுமா? உறுதி வழங்க முடியுமா? பின்னர் எவ் விதம் நாம் உங்களுடன் இணைந்து போராட முடியும் என அவர் தெரிவித்தார். (4,7)


சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.05.01
சீட்டிழுப்பு இல: 3887
வர்ணம்: இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,334,920/-
வெற்றி இலக்கங்கள் 25 45 46 72 H

SUPER BALL
சீட்டிழுப்பு வார 1726 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022/05/01 தினம் ஞாயிறு
N 05 59 67 71
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 59,323,080/-

சசிரி
சீட்டிழுப்பு 165
சீட்டிழுப்பு திகதி 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 27 34 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,359,960/-

ரைசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,933,201/-
திகதி 2022/05/01
வெற்றி வாரம் 3438
வெற்றி இலக்கங்கள் 04 08 20 21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,323,500/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 08 01 47 49 53
சீட்டிழுப்பு வாரம் 902
2022.05.01 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 234,334,321/-
தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1552
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2022.05.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,476,520/-
வெற்றி இலக்கங்கள் 07 12 32 66 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலோ / நாட் கூலியாகவோ வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள **மேசன், கூலியாள், தச்சுவேலை செய்பவர்கள்** மற்றும் **களஞ்சியக்காப்பாளர்** தேவை. (11236)

**077 777 0969**


# ஆவா குழுவை சேர்ந்த 16 பேர் கைது

(வவுனியா)

வவுனியா - ஓமந்தை கோதண்டர் நொச்சிகுளம் பகுதியில் சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த 16 பேரை ஓமந்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர்கள் நேற்று மாலை ஆவா குழுவின் பதாகைகளை பயன்படுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

குறித்த நபர்கள் தொடர்பான தீவிர விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7)


## வேலையாள் தேவை

ஏற்கனவே பெண்பிள்ளைகள் வேலை செய்கின்ற மா, தூள் அரைக்கும் மில்லிற்கு ஆண், பெண் இருபாலாரும் பழகி வேலை செய்யக்கூடியவர் தேவை.

சம்பளம் : 1,500/= இற்கு மேல் (11244)

**077 936 1356**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் ஒட்டகப்புலத்தில் **30** பரப்புக் காணி 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பிரதான (காபற்) வீதியில் இருந்து 50m தூரத்தில்.
- ஒட்டகப்புலம் றோ.க.த.கலவன் பாடசாலைக்கு அருகாமையில்.
- 14 அடிப்பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம்.

**ஒரு பரப்பின் விலை: ஐந்து இலட்சம்** (11246)

**☎-077 911 6983**

## ICOF - வளர்பிறை உளவளத் துணை நிலையம்

Since- 1994 Reg.No J/DS/SS/NGO/31

**ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சிநெறி**
**(Personality Growth &Co- Counsellor's Training Programme)**

வளர்பிறை உளவள நிலையத்தின் புலமைவாய்ந்த வளவாளர்களினால் மனித ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் 9 ஆவது பிரிவினருக்கான பயிற்சிநெறி **07.05.2022** அன்று எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக்காலம் :-100 மணித்தியாலங்கள்,பிரதி சனி, ஞாயிறு (9.00 - 1.00) வகுப்புக்கள் நடைபெறும்.
- பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தினால் பெறுமதியான கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித்தகைமை :- O/L, A/L
- விண்ணப்ப முடிவுதிகதி :- 06.05.2022
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை எமது அலுவலகத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம் :- 2,000.00
- குறிப்பு :- இச் சான்றிதழ் நேர்முகத் தேர்வுகளின்போது சித்தி அடைவதற்கும், இப் பயிற்சியானது வாழ்வை மகிழ்ச்சியான முறையில் வளமாக்கவும் உதவும். (11232)

தொடர்புகளுக்கு :
**077 266 0209**
**021 222 8238**

வளர்பிறை உளவளத் துணை நிலையம் (ICOF)
இல.05, பிளச்சஸ் லேன்,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி ஆனந்தபுரம் பகுதியில் **6** பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- நல்ல தண்ணீர்ஊற்று சூழல்
- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2km தூரம்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து 3km தூரம்

பார்வையிடும் நேரம் :
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை**

**1 பரப்பின் விலை 750,000/=**
தரகர் தேவையில்லை (11247)

ஜெயம்
**077 814 7389, 077 241 7589**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



# சிறி நதியா நகைமாளிகை

இல. 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2709

41 ஆண்டுகால அனுபவமிக்க கைராசியான நிறுவனம்.

# NSR JEWELLERY

இல. 131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2809

2022 சுபகிருது வருடத்தின் அட்ஷய திருதியை தினத்திற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம் : 03.05.2022 (செவ்வாய்க்கிழமை)**
**நேரம் : காலை 7.00 மணிதொடக்கம் பிற்பகல் 9.00 மணிவரை**

எமது 41 வருடகால சேவையினை வழங்க ஆதரவு நல்கிய எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களை அனைவரையும் அன்றையதினம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது நிறுவனத்தில் அன்றையதினம் தங்கம் வாங்கும் அனைவருக்கும் பெறுமதி மிக்க அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்படும்.



சித்திரை மாதம் சுக்ல பட்ச திருதியை அட்ஷய திருதியை நாளைக் கொண்டாடுவது யாவரும் அறிந்த ஒன்று அட்ஷய திருதியை அன்று நாம் செய்யும் எந்தக் காரியமும் வளர்ந்துகொண்டேயிருக்கும், பெருகிக்கொண்டே இருக்கும் என்பது திண்ணம் இத்தகைய சிறப்புமிக்க அட்ஷய திருதியை தினத்தன்று எமது வாழ்வின் தேவைகளில் ஒன்றாக விளங்கும் தங்கத்தினை தற்போதைய சூழ்நிலையில் தங்களின் வசதிக்கேற்ப பெரியதோ, சிறியதோ வாங்கி என்றும் குறைவில்லாத செல்வத்துடன், வளமுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம். (C-4271)



குறிப்பு : தற்போதைய சூழ்நிலை காரணமாக எமது வாடிக்கையாளர்களிற்கு தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பமுடியாதுள்ளது. எனவே மேற்படி அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல. 131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ - 021 222 2809

இல. 01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ - 021 222 2709


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.